**செய்தி வெளியீடு எண்: 694** **நாள்:15.10.2019**

## செய்தி வெளியீடு

ஹஜ்–2020–ல் ஹஜ் பயணம் மேற்கொள்ள விரும்பும் தமிழ் நாட்டைச் சேர்ந்த முஸ்லிம் பெருமக்களிடமிருந்து, சில விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்குட்பட்டு மும்பை, இந்திய ஹஜ் குழு சார்பாக தமிழ் நாடு மாநில ஹஜ் குழு, ஹஜ் விண்ணப்பங்களை (HAFs) வரவேற்கிறது. ஹஜ் 2020 ஆம் ஆண்டு முதல் 100% ஆன்லைனில் மட்டுமே விண்ணப்பிக்க இயலும் என இந்திய ஹஜ் குழு தெரிவித்துள்ளது. விண்ணப்பதாரர்கள் www.hajcommittee.gov.in என்ற இணையதள வழியாகவோ அல்லது HCoI என்ற ஹஜ் குழு மொபைல் ஆப் (Mobile app) வழியாகவோ 10.10.2019 முதல் 10.11.2019–ற்குள் வெள்ளை நிற பின்னனியுள்ள புகைப்படம், இந்திய பன்னாட்டு பாஸ்போர்ட் (20.01.2021 வரை செல்லத்தக்கது), முகவரி சான்று, ஒரு நபருக்கு ரூ.300/– வீதம் செலுத்தப்பட்ட வங்கி ரசீது அனைத்தையும் விண்ணபத்துடன் ஆன்லைன் மூலம் மட்டும் பதிவு செய்யவேண்டும். விண்ணப்பதாரர்கள் தங்கள் வசதிக்கு ஏற்ப நேரடியாகவோ, மாவட்டங்களிலுள்ள ஹஜ் தொண்டு நிறுவனங்கள் மூலமாகவோ அல்லது தமிழ் நாடு மாநில ஹஜ் குழு அலுவலகம் மூலமாகவோ பூர்த்தி செய்து விண்ணப்பிக்கலாம்.

2. வாழ்நாளில் ஒருமுறை மட்டும் இந்திய ஹஜ் குழு மூலமாக ஹஜ் பயணத்தை மேற்கொள்ளலாம் என்னும் விதிமுறையை இந்திய ஹஜ் குழு செயல்படுத்தி வருகிறது. 10–11–2019 அன்று அல்லது அதற்கு முன்பு வழங்கப்பட்டு, குறைந்தது 20–01–2021 வரையில் செல்லக்கூடிய இயந்திரம் மூலமாக படிக்கத்தக்க பன்னாட்டு பாஸ்போர்ட்டை விண்ணப்பதாரர்கள் வைத்திருக்க வேண்டும். ஹஜ் 2020 பற்றிய விவரங்களுக்கு ஹஜ் 2020–ற்கான வழிமுறைகளைப் படிக்கவும் அல்லது விண்ணப்பிப்பது தொடர்பான செய்திகளை தெரிந்து கொள்ள இந்திய ஹஜ் குழுவின் ஹஜ் தகவல் மையம் 022–22107070 (100 இணைப்புகள்) என்ற எண்ணை தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**